# கிளி அண்ணா

## அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் - சில நினைவுகள்




**கருணா**
*(ஒரு பேப்பருக்காக )*

ஞாயிற்றுக்கிழமை காலை அக்கா தொலைபேசியில் கூப்பிடுகிறா. ‘கிளியண்ணா.... கிளைமோர் ஒண்டில..’. அதன் பின் ஒரு நீண்ட மௌனம். யாரோ ஆயிரம் சம்மட்டியால் ஓங்கி அடிக்கிறார்கள். தொண்டைக்குள் ஏதோ அடைத்துக் கொள்கிறது.

கிளியண்ணா இறந்து போய்விட்டார். இனி கரகரப்புடன் கூடிய அந்தக் குரல் கேட்காது. நிலவரம் நிகழ்ச்சியில் அவர் வரப் போவதில்லை. ஊடகங்களில் அவரது ஆன்மீகப் பணி பற்றியும், மனித உரிமைகள் தொடர்பான பணிகள் பற்றியும் பேசுகிறார்கள். அறிக்கைகள் வருகின்றன. நாடுகள் கண்டனம் செய்கின்றன. அவருடைய பிரமாண்டம் எனக்குப் புரிகிறது. ஆனால் ஒரு சாதாரண மனிதராக, சகோதரனாக எனக்குத் தெரிந்த ‘கிளியண்ணா’ வின் பக்கம் ஒன்றும் இருக்கிறது.

அவர் எனக்கு அப்பாவின் நண்பராகவே அறிமுகமானார். பின்னிரவில் இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் என்ன பேசினார்கள் என்பதெல்லாம் இப்போது ஞாபகமில்லை. அப்போது அவர் ட்யூட்டரிகளில் பிரபலமான ஆங்கில ஆசிரியராக இருந்தார். பிறகு சிலகாலம் பருத்தித்துறையிலுள்ள இலங்கை வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அப்பா ஒரு புதிய தகவலுடன் வந்தார் ‘கிளிஅண்ணா பாதராக போகப் போறாராம்’. எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

சிறுவயதிலேயே குருத்துவக்கல்லூரிக்கு போய் குருவாக வந்தவர்களைத்தான் எனக்குத் தெரிந்திருந்தது. வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்த கிளியண்ணா குருவாக வருவதற்காக, குருத்துவக்கல்லூரிக்குப் போகப் போகிறார் என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பின்பு நீண்டநாட்களுக்குப் பின் அவருடன் இரண்டு, மூன்று மாதங்கள் ஒன்றாக, ஒரே அறையில் இருக்க வேண்டிவந்தது. அப்போது ஒரு அருட்சகோதரனாக அவர் இளவாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த நாட்களில் இந்திய இராணுவத்துக்குப் பயந்து பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருவதில்லை. மின்சாரம் இல்லை. தொலைக்காட்சி கிடையாது. அவருடன் பேசுவதே எனக்கான ஒரேயொரு பொழுது போக்காக இருந்தது. அவர் மிக எளிமையான ஒரு மனிதராக எனக்குத் தெரிந்தார்.

அதுவரை மிடுக்காக உடையணிந்து மோட்டார் சைக்கிளில் வங்கிக்கு போகும் கிளியண்ணா, ஒரு அதிகாரி போன்ற பிம்பத்தையே எனக்குள் உண்டாக்கியிருந்தார். அதற்கும் இப்போதிருக்கும் துறவிக்கும் எந்தத் தொடர்பும் தெரியவில்லை.

அவருடைய ஆங்கிலப்புலமை அதீதமானது. ஆங்கில அகராதியை அவர் மனனம் செய்து வைத்திருக்கிறாரோ என அடிக்கடி எண்ணத் தோன்றும். எமக்குத் தொடர்பில்லாத சொற்களைக்கூட அவர் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். துறை சார்ந்த சொற்கள்கூட அவருக்குத் தெரிந்திருந்தது.

இன்னோர் விடயத்திலும் அவர் எனக்கு ஆச்சரியமூட்டினார். அவருக்கு இரண்டு கைகளாலும் எழுத வந்தது. கொப்பியில் இடது புறம் இடது கையாலும் வலது புறம் வலது கையாலும் எழுதுவார். இரண்டு பக்கங்களிலுமுள்ள எழுத்துக்களுக்கும் வேறுபாடு இருக்காது.

மரணம் அவரை (எனக்குத் தெரிந்து) இரண்டு தடவை முகர்ந்து பார்த்து விட்டு சென்றிருக்கிறது. 84இல் ஒரு நாள் கிளியண்ணா மினிவான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருக்கிறார். முதல் நாள் ஏதோவொரு தாக்குதல் நடந்திருக்க வேண்டும். திடீரென வானுக்கு முன் ஒரு கவச வாகனம் தோன்றுகிறது. கவசவாகனத்தின் மேலிருக்கும் பெரிய துப்பாக்கி சுடத் துவங்குகிறது. வாகனத்தில் இருந்தவர்கள் சிதறி ஓடுகிறார்கள்.

கிளியண்ணாவுக்கு கழுத்திலும், தோள் பட்டையிலும் பலத்த காயம். வீழ்ந்து கிடந்தவரை இராணுவத்தினர் கவச வாகனத்துக்குள் தூக்கிப் போடுகிறார்கள். கவச வாகனம் முகாமை நோக்கி ஓடத் தொடங்குகிறது.

கவசவாகனத்தில் ஓட்டுனரின் பகுதி தனியாக இருக்கும். பின்புறத்தில் கிளியண்ணாவுடன் ஒருவன் மாத்திரமே உட்கார்ந்திருக்கிறான். துப்பாக்கியுடன் வாகனத்தின் மேலே ஒருவன் இருக்கிறான்.

கிளியண்ணாவால் நகரமுடியவில்லை. இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் நினைவிழக்கவில்லை. அருகேயிருந்த இராணுவத்தினன் இவரின் பைகளைப் பரிசோதிக்கிறான். அவருடைய செபமாலையைக் காண்கிறான். அவர் சொன்னபடி, அது அவனுக்குள் ஏதோவொரு மாற்றத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

இவரிடம் குனிந்து ‘கண்களை மூடிக்கொண்டு அசையாமல் படுத்திரு’ என்கிறான். பின் கவசவாகன ஓட்டுனரிடம் ‘இவன் இறந்து போய்விட்டான். இவனை எறிந்து விட்டுப் போய்விடலாமா’ என்கிறான். ஓட்டுனருக்கும் அது சரியாகப் பட்டிருக்கவேண்டும்.

வாகனத் தொடரணி நிற்கிறது. வேறொருவன் வந்து இவரின் காலைப்பிடித்து இழுத்து வெளியே எறியப் போகிறான்.

அருகே உட்கார்ந்திருந்தவன் அவனைத் தடுத்துவிட்டு இவரைத் தூக்கிச் சென்று அருகிலிருந்த பற்றையொன்றுக்குள் கிடத்துகிறான். இவரின் தலையில் முள் குற்றி விடக் கூடாதென்பதற்காய் இவருடைய செருப்பைக் கழற்றி இவருடைய தலைக்குக் கீழே வைக்கிறான். இவருடைய தோளில் இலேசாக விடை கொடுப்பது போலத் தட்டிவிட்டு போய் விடுகிறான். கவச வாகனத் தொடரணி புறப்படுகிறது.

அவர் அசைய முடியாது படுத்திருக்கிறார். அந்த வழியால் போனவர்கள் இவரைக்கண்டு, உயிர் இருக்கிறது என ஆச்சரியப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பிக்கிறார்கள்.

இதனிடையே வானில் சென்றவர்கள் கிளியண்ணாவை இராணுவம் சுட்டுக் கொன்று விட்டதாக ஊரில் வந்து கூறுகிறார்கள். அவருடைய தாயார் வைத்தியசாலைக்கு ஓடுகிறார். பிணவறையில் மகனைத் தேடி அழுது கொண்டிருந்தவருக்கு, அவர் வாட்டில் இருப்பதாக ஒரு மருத்துவர் கூறுகிறார். (எப்படியிருந்திருக்கும்). மரணம் அவர் அருகே வந்து சென்றிருக்கிறது.

இதை அவர் இளவாலையில் இரண்டு, மூன்று தடவை கூறக் கேட்டிருக்கிறேன். அது மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு கதையாக இருக்குமே தவிர கதாநாயகத் தன்மை கொண்ட ஒரு திரைக்கதை போல இருக்காது.

*( தொடர்ச்சி 30ம் பக்கத்தில்)*

# துயர்பகிர்வு



அருட்தந்தை M.X. கருணாரத்தினம்
(கிளி) அடிகளார்

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவரும் மல்லாவி பங்குத்தந்தையுமான அருட்தந்தை M.X. கருணாரத்தினம் (கிளி) அடிகளார் தமிழீழம் மல்லாவியில் 20.04.2008 அன்று அகால மரணமானார்.

இவர் கரவெட்டியைச் சேர்ந்த காலம் சென்றவர்களான திரு. நீ. மரியாம்பிள்ளை, திருமதி. மேரி ராசமணி தம்பதிகளின் அருமை மகனும் ஜெகசோதி (கனடா), காலம் சென்ற குலரத்தினம், ஞானசோதி, இரத்தினசோதி (மல்லாவி), அரியரத்தினம் (ஜேர்மனி), காலம்சென்ற ஜேசுரத்தினம், ஜீவரத்தினம் (ஜேர்மனி), அருட்தந்தை ஞானரத்தினம், உதயசோதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வரதராசா(கனடா), சத்தியசீலி(கரவெட்டி), புஸ்பராசா, பத்திமா(ஜேர்மனி), ஜோய்(ஜேர்மனி), யேம்ஸ்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

*தகவல்: வரதராசா 001-905-264-7616*
*ஜீவரத்தினம் - 00497031674392*
*உதயசோதி - 00940314871830*
*அன்ரனி - 00497031228727*